T-UN-184

தமிழ்த்தோட்டம் எழிலோங்க விரும்பு வோர்கள்
தம்முழைப்பால் அதன் வளத்தைப் பெருக்கல் வேண்டும்!

# உழவுத் தமிழ்

மக்களிடையே வழங்கிவரும்
பழகு தமிழ்ச் சொற்களைத் திரட்டும் முயற்சிக்கு
உழைப்புதவி தாருங்கள்

தொகுப்பு நெறியாளர்கள் :

**சாலை இளந்திரையன்**
**சாலினி இளந்திரையன்**

3362/1, Christian Colony
DELHI-5

பதகுப்பட்டியில்
1

## முதலில் இதைப் படியுங்கள்

உடனே நடைபெற வேண்டிய இரண்டு தமிழ்ப்பணிகள் என்னும் அறிக்கையைக் கடந்த 30-3-1968-ல் வெளியிட்டோம். "தமிழின் புதிய துறைகளில் பயன்படுத்துவதற்கு வேண்டிய பல தமிழ்சொற்கள் பழைய தமிழ் நூல்களில் உள்ளன; மக்களிடையில் பேச்சுவழக்கிலும் உள்ளன. அவைகளைக் கண்டறிவதற்கு வசதியாக, தமிழ் நூல்கள் அனைத்துக்கும் சொல் அகராதியும் சொல் அடைவும் தயாரிக்க வேண்டும்; பேச்சு வழக்கில் உள்ள சொற்களைத் திரட்டித் தொகுத்து வகைப்படுத்தி வெளியிட வேண்டும். இந்தப் பணிகளில் தமிழக அரசும் தமிழ் வளர்ச்சியில் அக்கறை கொண்ட அறிஞர்களும் ஈடுபட வேண்டும்". இவைகளே, அந்த அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டு வற்புறுத்திய பொருள்கள்.

பழந்தமிழ் நூல்களுக்குச் சொல்லகராதி தயாரிக்கும் பணியில் அங்கங்கே சில அன்பர்கள் (ஆய்வாளர்கள்) ஈடுபட்டிருக்கிறார்கள். எனவே, பேச்சுத்தமிழில் உள்ள பல துறைச் சொற்களைத் தொகுக்கும் பணியின் முதற்படியாக உழவுத் தமிழ் சம்பந்தப்பட்ட சொற்களை முதலில் தொகுத்து வெளியிடும் எண்ணத்தில், இப்போது அந்தப் பணியைத் தொடங்குகிறோம்.

## நீங்கள் செய்ய வேண்டியது

அடுத்து வரும் பக்கங்களில் உள்ள படிவத்தில், முகவை மாவட்டம் மதகுப்பட்டிப் பகுதியில் வழங்கும் உழவுத் தமிழ்ச் சொற்களும் அவற்றின் (பொருள்) விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சொற்களால் குறிக்கப்படும் பொருளை விளக்க உங்கள் ஊரில் எந்த எந்தச் சொற்களை வழங்குகிறார்கள் என்பதை மட்டும் ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே அடுத்த பத்தியில் குறியுங்கள். (சான்றாக மதகுப்பட்டியில் **களைக்கொட்டி** என்பது தென்நெல்லையில்

# உழவுத் தமிழ்

| இராமநாதபுரம் மாவட்டம் மதகுப்பட்டி என்னும் ஊரில் வழங்கும் சொற்கள்* | ...................மாவட்டம் ...........என்னும் ஊரில் வழங்கும் சொற்கள்** |
|---|---|
| 1 | 2 |

அகவிலை — தானியவிலை

அசுகுணி — மழை குறைந்த காலங்களில் பயிரில் விழும் பூச்சி

அசைபோடல் — அவசரமாக உண்ட உணவை மீண்டும் தன் வாய்க்குக் கொணர்ந்து மெல்லும் மாடுகளின் செயல்

அச்சாணி — கடையாணி; (அச்சுச் சாவி)

அடிக்கட்டை—கதிரறுத்த பின் எஞ்சிய தாள்

அடிச்சால் — உழவின் தலைச்சால்

அடிமடை — உள்மடை; உள் மதகு

| *இச்சொற்களைத் தொகுத்து உதவியவர்: | **இப்பகுதியிலுள்ள சொற்களைத் திரட்டியவரின் பெயரும் முகவரியும்: |
|---|---|
| திரு. சா. வி. இராசேந்திரதாசன் | ................................ |
| மதகுப்பட்டி (அஞ்சல்) | ................................ |
| இராமநாதபுரம் | ................ |

களைவாரி என்று சொல்லப்படுகிறது; மதகுப்பட்டியில் தோப்பரை என்பது நெல்லையில் கமலைவால் என்று சொல்லப் படுகிறது.) இதிலுள்ள சொல்லேதான் உங்கள் ஊரிலும் வழங்கினாலும், அதையும் குறியுங்கள். சொற்களை, முதலில் பேச்சு வழக்கில் சொல்லப்படுவது போலவே எழுதி, அடுத்து நக அடைப்புக்குள் ( ) திருத்தமான வடிவத்தையும் எழுதுவது நல்லது. எடுத்துக்காட்டாக, மதகுப்பட்டிப் பகுதியில் 'ஓர் இணைமாடு' என்பதை 'ஓர்ணமாடு' என்று (பேச்சுவழக்கில்) சொல்லுகிறார்கள். இதை நமது படிவத்தில் ஓர்ணமாடு-(ஓர்இணைமாடு) என்று எழுத வேண்டும்.

இப் படிவத்தில் இடம் பெற முடியாத வேறு புதிய உழவுத்தமிழ்ச் சொற்கள் உங்கள் பகுதியில் கிடைத்தால் அவைகளைத் தனித்தாளில் எழுதி, முதற்பத்தியில் உள்ளது போல, அவைகளுக்குப் பொருள்விளக்கமும் எழுதி இப்படி வத்தோடு இணைத்து அனுப்புங்கள். இந்தப் புதிய சொற்களை அகர வரிசையில் எழுத வேண்டுமென்ற கட்டாயமில்லை; எந்த வரிசையில் வேண்டுமானாலும் கொடுங்கள்.

சொற்களைச் சேகரித்துப் படிவத்தில் நிரப்புவது சம்பந்த மாக இன்னும் / விளக்கம் விவரம் ஏதேனும் தேவைப் பட்டால் உடனேயே எங்களுக்கு எழுதுங்கள்.

இது நமது பணி; நம் தமிழுக்கு நாம் எல்லோரும் சேர்ந்து செய்யும் புதிய பணி. இதிலே சிறிய சிரமங்கள் இருந்தால் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்தப் படிவத்தின் முதற்பத்தியில் உள்ள சொற்களை ஆர்வத்தோடு தொகுத்து உதவிய தம்பி திரு. சா. வி. இரா சேந்திரதாசன் அவர்கட்கு எங்கள் வாழ்த்துக்கள்; இப் பணியில் எங்களோடு ஒத்துழைக்கப் போகும் உங்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி.

சென்னை
1-7-1969

அன்புடன்,

சாலை-சாலினி

# உழவுத் தமிழ்

| | |
|---|---|
| இராமநாதபுரம் மாவட்டம் மதகுப்பட்டி என்னும் ஊரில் வழங்கும் சொற்கள்* | ....................மாவட்டம் ..............என்னும் ஊரில் வழங்கும் சொற்கள்** |
| 1 | 2 |

அகவிலை — தானியவிலை

அசுகுணி — மழை குறைந்த காலங்களில் பயிரில் விழும் பூச்சி

அசைபோடல் — அவசரமாக உண்ட உணவை மீண்டும் தன் வாய்க்குக் கொணர்ந்து மெல்லும் மாடுகளின் செயல்

அச்சாணி — கடையாணி; (அச்சுச் சாவி)

அடிக்கட்டை—கதிரறுத்த பின் எஞ்சிய தாள்

அடிச்சால் — உழவின் தலைச்சால்

அடிமடை — உள்மடை; உள் மதகு

---

*இச்சொற்களைத் தொகுத்து உதவியவர்:

திரு. சா. வி. இராசேந்திரதாசன்
மதகுப்பட்டி (அஞ்சல்)
இராமநாதபுரம்

**இப்பகுதியிலுள்ள சொற்களைத் திரட்டியவரின் பெயரும் முகவரியும்:

..............................
..........................
.................

அடிவாமடை — நீர் நிலைக்கு அருகிலிருந்து நீர் பெறும் நிலம்

அடைகட்டி — அடைமண்; நீர்ப் போக்கைத் தடுத்து மறைத்து இறுகியுள்ள மண்

அடைகல் — மதகை அடைக்க உதவும் கல்

அடைகுளம் — வாய்க்கால் இல்லாத குளம்

அடைமண் — வண்டல் மண்

அடைமழை — விடாமழை

அந்து — நெல்லை உண்டு பயிர் கெடுக்கும் பூச்சி; நெல்வண்டு

அம்பாரம் — நெற்குவியல்

அரிதல் — அறுத்தல், நறுக்குதல்

அரிதாள் — கதிரறுக்கப்பட்ட தாள்

அரிவி வெட்டுதல் — கதிரறுத்தல்

அரைச்சாவி — அரைகுறையாக விளைந்த நெல்

அளங்கு — கூறேடி; அறுவடை ஆட்களுக்கு அவரவர் வேலையைப் பகர்நது கொடுப்பவர்

அறுப்பு — கதிரறுத்தல்; அறுவடை

அறுப்புக்காலம் — அறுவடைக் காலம்

அறுப்புக் கூலி —கதிரறுக்கக் கொடுக்கும் நெல் கூலி

அறுவடை — கதிர் அறுத்தல்

ஆடிக்கோடை — ஆடிமாத அறுவடை நெல்

ஆடிப்பட்டம் — விதையிடும் காலம்

ஆட்டுக்கிடை — (உரம் பெற) வயலில் ஆடுகளை அடையப்போடுதல்

ஆண்மரம் — உள் வயிரமுள்ள மரம்; காய்க்காத மரம்

ஆறப்போடுதல் — உழுத நிலத்தைக் காயப்போடுதல்

இரட்டிப்பு — முதல்நாள் உழுத நிலத்தில் மறுநாளும் உழுதல்

இரண்டாங்கம்பு — முதல்நாள் ஊற வைத்த நெல்லை மறுநாள் அதே நேரத்தில் விதைப்பது

இராசி காணுதல் — அதிக விளைச்சல்

இருமண் பாடு — களியும் மணலும் சமமாகக் கலந்துள்ள நிலம்

இறைவை — இறைகூடை; இறை வட்டி; (பள்ளத்தில் உள்ள நீரை மேட்டுக்குச் செலுத்த உதவும் நீர்வாரி)

இறைவைப்பெட்டி — இறைகூடை

ஈரங்கட்டுதல் — மழை கனமாகப் பெய்வதால் தரை காயாமல் இருத்தல்

ஈருழவு—ஈரோட்டு—கிழக்கு மேற்காக உழுத நிலத்தைத் தென்வடலாக

உழுவதும் தென்வடலாக உழுத நிலத்தை கிழமேற்காக உழுவதும்

ஈர்ணமாடு—ஈரணைமாடு ஈரிணைமாடு இரண்டு ஏருக்குரிய நான்கு மாடுகள்

உடையடித்தல்—காயடித்தல் (எருதின் ஆண் தன்மையை இழக்கச் செய்தல்)

உமி — தானியங்களின் மேல் தோல்

உரம் போடுதல் — பயிரின் மேல் உரத்தை விசிறுதல்

உரம் வைத்தல் — பருத்தி போன்ற செடிகளின் அடியில் உரத்தை வைப்பது

உருட்டி — கமலைக் கயிற்றை இயக்கும் மர உருளை

உவடு — உவர்மண்; எதுவுமே விளையாத மண்

உவை — கதிரறுத்த பின் உள்ள தாளில் வளரும் பயிர்

உழவடை — விதைப்புக்கு உழும் காலம்

உழவன் — உழுபவன்; விவசாயி

உழவுகட்டல் — முதற்சால் கட்டுதல்

உழவுகயிறு — மேழி, கலப்பை, நுகம் ஆகியவற்றைப் பிணைக்கும் கயிறு

உழவுசால் — படைச்சால்

**உளுத்தல்** — பூச்சி, புழு அரித்துக் கெட்டுப்போதல்

**உறை** — நெற்குதிர்

**ஊடுபயிர்** — இருவகைத் தானியங்களைக் கலந்து பயிரிடல்

**ஊட்டம்** — சத்து; உரம்

**ஊண்டுமரம்** — ஏற்றந்தாங்கி; துலாத் தாங்கி

**ஊர்க்காலி** — ஒன்ருகச் சேர்ந்து மேயச்செல்லும் ஊர்மாடுகள்

**ஊழியக்காரன்** — வேலைக்காரன்; பண்ணைக்காரன்

**ஊற்ருணி** — கலப்பைக்குற்றி

**ஊற்றுவாய்க்கால் பிடித்தல்**—தொளியில் உள்ள நீரை வடித்து அப்புறப்படுத்தல்

**எரு** — விலங்குகளின் கழிவாலும், தழைகளாலும் ஆக்கப்படும்உரம்

**எருதடித்தல்** — சூடடித்தல்; பிணையலடித்தல்

**ஏரடித்தல்** — உழுதல்

**ஏர்** — கலப்பை

**ஏர்க்கூலி** — உழுகூலி

**ஒருழவு**
**ஓரோட்டு** } —கிழக்கு மேற்காகவோ தென்வடலாகவோ ஒரே முறை உழுதல்

**ஓர்ணமாடு → ஓரணைமாடு →** ஓரிணை மாடு; ஓர் ஏருக்குரிய இரண்டு மாடுகள்

**கடப்பாரை** — கட்டப்பாரை; கெட்டியான தரையை இடிக்கவும், குழி தோண்டவும் பயன்படும் உறுதியான இரும்புக் கம்பி

**கடைகால்** — நீரிறைக்கும் வாளி

**கண்மாய்** — ஏரி; (குளம்)

**கதிரடித்தல்** — தாளும் மணியும் தனித்தனியாகப் பிரித்தல்

**கதிரறுத்தல்** — முதிர்ந்த கதிரை அரிந்தெடுத்தல்; (அறுவடை)

**கதிர்ஒதுக்கல்** — நெல் கதிர் விளைந்த பின் நெல்லை ஒதுக்கி ஊத்து வாய்க்கால் எடுத்தல்

**கதிர்** — தானியக்கொத்து

**கதிர்க்காவல்** — கதிர் முற்றிய காலத்தில் களவு போகாமல் காப்பது

**கதிர்க்கூலி** — கதிரறுக்கும் கூலி

**கமலை** — எருதுகளைப் பூட்டி நீரிறைக்கும் கருவி

**கரம்பை** — ஏரியிலும் குளத்திலும் படிந்திருக்கும் வண்டல்

**கரிசல்** — கருநிற மண்ணுள்ள நிலம்

**கருக்கரிவாள்** — கதிரறுக்கும் அரிவாள்

**கருக்காய்** — விளையாத நெல்

**கருமாயம்** — அதிகவிலை; அநியாயம்

**கலப்பை** — ஏர்; உழுபடை

**கலப்பைக் கயிறு** — உழவு கயிறு

**கலம்** — 54 படி கொண்ட அளவு; சில பகுதிகளில் 48 படி கொள்ளும்

**கலுங்கு** — மடையிலிருந்து நீர் வெளியேறி விழும் இடம்

**கழனி** — வயல்

**களம்** — கதிரடிக்கும் இடம்

**களர்மண்** — உவர்மண்; (உவடு)

**களை** — பயிர் வளரத் தடையாக வளரும் புல் முதலியன

**களை எடுப்பு** — களை அகற்றுதல்

**களைக்கொட்டு**, **களைக்கொட்டி** — களை அகற்ற உதவும் சிறிய மண்வெட்டி

**களைபறித்தல்**, **களைபிடுங்கல்** — கையால் களையை அகற்றுதல்

**களைவெட்டு** — களைக்கொட்டால் களை அகற்றுதல்

**கவிந்திருத்தல்** — (பயிர்) நிலம் நோக்கிக் குனிந்திருத்தல்

**காணிகரை** — நிலச்சொத்து

**காலப்பயிர்**, **காலப்போகம்** — பருவத்திற்குரிய பயிர்

**கால மழை** — பருவ(த்தில் பெய்யும்) மழை

**கால்வாய்** — வாய்க்கால்

**கிடையமர்த்தல்** — ஆடு, வாத்து ஆகியவற்றின் கழிவைப் பெறுவதற்காக அவற்றை வயலில் அடையப் போடுதல்

**கிணறு** — கேணி

**கிராய்** — புல்பற்று; (கரண்)

**கிழங்கு** — செடி கொடி ஆகியவற்றின் மூலம்; நிலத்தின் அடியில் விளையும் உணவுப்பொருள்

**சடைக்கிழங்கு, விரலி** — மஞ்சள், இஞ்சி, வாழை போன்ற கிழங்கு வகைகள்

**வேர்க் கிழங்கு** — வேர் பருத்துக் கிழங்காகும் இனம்: முள்ளங்கி, காரட், பீட்ரூட் முதலியன.

**தொலிக்கிழங்கு, பூடு** — அடுக்கடுக்காகத் தோல் பொருந்தியகிழங்கு: வெங்காயம், வெள்ளைப் பூண்டு முதலியன.

**கீவாமடை** — (வடிவாமடை); வரப்பில் நீர் வெளியேறும் தூம்பு

**கீழ்க்கன்று** — வாழையினத்தின் அடியில் சிம்பு வெடித்து உருவாகும் அடிக்கன்று

**கீழ்மடை** — கடைமடை; நீர்பாயத் தூரமான நிலம்

**குடியானவன்**—வேளாளன்; விவசாயி

**குத்துக்கம்பு**—தாற்றுக்கோல்; தார்க்கம்பு

**குத்துச்செடி**—நிலம் பற்றிப் படராத செடி

**குந்தாணி** — நெல் குற்றும் மர உரல்

**குப்பம்** — 100 நாற்றுமுடி; (ஒரு கைப்பிடி கொண்டது 1 முடி; 5 முடி — 1 ஈடு; 20 ஈடு — 1 குப்பம்)

**குப்பைத்தட்டு** — குப்பை அள்ளப் பயன்படுத்தும் தட்டுக்கூடை

**குப்பையடித்தல்** — கிடங்குகளில் சேர்த்து வைத்த குப்பையை வயலில் சிதறுதல்

**குலை பொறுக்கல்** — கதிர் அறுக்கும் போது உதிர்ந்த நெற்கொத்தைச் சேகரித்தல்

**குளக்கால்**—குளத்திலிருந்து நீர் வெளியேறும் வாய்க்கால்

**குளுதாடி** — குடிதாழி; மாடு நீர் அருந்தும் மண்கலம்

**குறுக்குச்சால்** — உழுத நிலத்தின் குறுக்கே ஏர்பிடித்துத் தவறாக உழுதல்

**குறுணி** — மூன்று படி கொள்ளும் அளவு. (சில பகுதிகளில் எட்டுப் படிக்கும் இப்பெயர் உண்டு)

**குறுணை** — நொறுங்கிய அரிசி

**குறுக்கம்** — 96 செண்ட் நிலம்

**கைக்கொட்டு** — சிறிய களைக்கொட்டு

**கூலம்** — தானியம்

**கூலி** — வேலைக்குப் பெறும் ஊதியம்

**கூலிஏர்** — கூலிக்கு உழும் ஏர்

**கூலிப்பாடு** — கூலி வேலை செய்து வாழும் பிழைப்பு

**கூனை** — கமலை இறைக்கும் மிடா; நீர்ச்சால்

**கொடிக்கால்** — வெற்றிலை பயிராகுந் தோட்டம்

**கொட்டு** — மண்வெட்டி

**கொட்டை** — வித்து

**கொண்டி**—கொழு மாட்டும் இரும்பு

**கொண்டி தள்ளுதல்** — உழும்போது கொழுவில் சேரும் மண்ணை அகற்றுதல்

**கொத்து** — கதிரறுக்கும் கூட்டம்; கிளறிவிடு

**கொத்துப்படி** — கதிரறுக்குங் குழுத் தலைவருக்குத் தரப்படும் கூலி

**கொய்தல்** — பறித்தல்

**கொழு** — கலப்பைக் கொழு ஆணி

**கொழுக்கொண்டி** — கொழு மாட்டும் இரும்பு

**கொழியரிசி** — நன்ருகத் தீட்டப்படாத அரிசி

**கொருக்கலப்பை** — கைப் பிடியை ஒட்டி விதை போடும் ஏற்பாடு உள்ள கலப்பை

**கோடை** — கோடைப் பருவப் பயிர்

கோட்டை — 24 மரக்கால்

சண்டு — கூளம்; பதர்

சம்பளம் — கூலி; ஊதியம்

சம்பா — உயர்ந்த நெல்வகை

சல்லிக்கட்டு — மஞ்சிவிரட்டு

சல்லிமாடு — மஞ்சி விரட்டுக்காக வளர்க்கும் காளை

சாகுபடி-வெள்ளாமை (வேளாண்மை)

சாணி — மாட்டுச்சாணம்

சாண்கலப்பை—தரிசு கீறும் கலப்பை; (ஒரு சாண் அகலமுள்ள கொழு வுள்ளது)

சாம்பற்குறி — பொலியைச் சுற்றிச் சாம்பலால் இடும் அடையாளக் கோடு

சாரம் — சத்து

சால் — உழவுசால்; நீரிறைக்கும் மிடா

சால்தாங்கிக்கட்டை — துலாமரத்தில் சால் விழுந்துவிடாமல் தாங்கும் கட்டை.

சால்தாங்கி மட்டை — இழுவைக் கம்பு

சாவி — பதர்

சுண்டு கயிறு — கமலைச் சாலின் தோலில் கட்டியுள்ள கயிறு

1 2

சூடடித்தல் — பிணையடித்தல்

செங்காடு — சிவந்த நிலம்

செங்காய் — முதிராத காய்

செத்தை — இலை, பழுப்பு, சருகு ஆகியவற்றால் ஆன குப்பை

செம்பாட்டு விதைப்பு, வறவிதைப்பு — நெல் ஊறவைக்காமல் விதைப்பது

செய் — வயல்

செவ்வல் — செம்மண் நிலம்

சோடை — சாவி; பதர்

தசகூலி — உழவுக்கூலி

தட்டை — சோளம், கம்பு ஆகியவற்றின் காய்ந்த தண்டுப்பகுதி

தண்ணீர் பாய்ச்சுதல் — வயலுக்கு நீர் அடைத்தல்

தண்ணீர் விடுதல்—கண்மாயிலிருந்து வயலுக்கு நீர் திறந்துவிடல்

தண்ணீர் காட்டுதல் — எருதுகளை நீர் அருந்தச் செய்தல்

தரிசு — பயிரிடாத நிலம்

தரிசு கீறுதல் — முதன் முறையாக உழுதல்

தரிசு போடுதல் — நிலத்தை உழாமல் போட்டு வைத்தல்

தலைக்கயிறு — உழவு கயிறு; மேழி, கலப்பை, நுகம் ஆகிய மூன்றையும் பிணைப்பது.

**தலைமடை** — முதல்மடை

**தழவுகொய்தல்** — நட்ட நாற்று வளரும் போது, சில வேகமாக வளர்ந்து மற்றவற்றைக் காட்டிலும் உயர்ந்திருக்கும்;– அவற்றை மற்றவற்றிற்குச் சமமாக அரிதல்

**தளுக்கு** — (களத்தில்) கதிரடித்த பின் சூடடிக்க வைத்திருக்கும் தாள்

**தளுக்கடித்தல்**— சூடடித்தல்

**தத்துவாக்கிராய்** — மழை விழுந்து பயிரை அடித்துச் செல்லாமலும் நீர் கடந்து விடாமலும் வரப்பின் மீது அணையாக வைக்கப்படும் புல்பற்று.

**தழை** — பசுந்தாள்

**தழையுரம்** — பசுந்தாளுரம்

**தார்க்கம்பு** — தாற்றுக்கோல்

**தாள்** — நெல்லின் இலை

**தானியம்** — சோளம், கம்பு போன்ற பயிர்வகை.

**தீய்ந்து போதல்** — கருகிப் போதல்;

**தீவனம்**, **தீனி** } மாட்டுக்குரிய உணவு

**தும்பு** — மாடு கட்டுங் கயிறு

**துரவு** — பெருங்கிணறு

**துரோட்டி–தொரட்டி**-பிணையடிக்கும் போது வைக்கோலை இழுக்க உதவும் கோல்

**துலா** — ஏற்றம்

**துலாச்சால்** — ஏற்றத்தில் உள்ள நீர் இறைக்கும் மிடா

**துலாமரம்** — ஏற்றமரம்

**தூணி** — நான்கு மரக்கால் அளவு

**தூம்பு** — வரப்பின் வழியாக நீரைக் கடத்த உதவும் மண்குழாய்

**தூர் எடுத்தல்** — கிணற்றின் உள்ளே உள்ள சேற்றை அகற்றுதல்

**தூறுதல்** — மழைத்தூற்றல் விழுதல்

**தூற்றல்** — மழைத்துளி

**தூற்றுதல்** — நெல் மணியையும் பதரையும் பிரிக்க முறத்தால் புடைத்தல்

**தொம்பரை**, **தொம்பை** — மூங்கிலால் முடைந்த நெற்குதிர்

**தொலி** — மேல்தோல்

**தொளி** — சேறு

**தொளிநாற்று** — நீருள்ள நிலத்தில் விதைத்து எடுக்கும் நாற்று

**தொளியடித்தல்** — நீர் பாய்ச்சி உழுதல்

**தோகை** — கரும்பின் தாள்

**தோண்டி** — நீர் மொள்ளும் வாளி

**தோப்பரை** — சாலின் கீழுள்ள நீர்ப்பை; (தோலிலோ சணிலிலோ செய்யப்பட்டது.)

**தோப்பு** — கனிமரச் சோலை

**நஞ்சை**
**நஞ்செய்** } பண்படுத்திய நிலம்;

**நடவு** — நடுகை

**நடவுகூலி** – நாற்று நடுவதற்குக் கொடுக்கப்படும் கூலி

**நண்டுக்கால்** — கமலையின் மேல் உருட்டியைத் தாங்கி நிற்கும் கட்டைகள்; (சிரகப்பலகை)

**நவரைப்பட்டம்** — தைப்பட்டம்

**நாம்பு** — மெல்லிய கொடி

**நாழி** — ஒரு படி

**நாற்றங்கால்** — நாற்றுக்காக விதையிடும் நிலம்

**நாற்றடிக்குச்சி** — நாற்றைப் பிடுங்கி அதிலுள்ள சேற்றை அகற்ற இரண்டடி நீளமுள்ள கோல் ஒன்றில் தட்டுவர்; அக்கோலே நாற்றடிக்குச்சி

**நாற்றுப்பிடுங்கல்**—வேறிடத்தில் நடுவதற்காக நாற்றைப் பறித்தல்

**நாற்றுவிளம்பல்**—பிடுங்கிய நாற்றை நடுவதற்குப் பகிர்ந்து போடுதல்

**நிறைஞ்ச நடுகை** — நடுகை முடிந்த நாளில் ஒரு முடியை எடுத்து வந்து, செப்பு ஒன்றில் நீர் பெய்து நெல்முடியை நட்டுச் சாமி கும்பிடுவர். மறுநாட் காலை, முதல்நாள் இறுதியாக நட்ட நிலத்தில் இந்த முடியை நட்டு நடுகையைநிறைவுசெய்வர்.

**நீராணி** — கண்மாயிலிருந்தோ, கால் வாயிலிருந்தோ நீர் பிரித்து விடுதற்குஅதிகாரம் பெற்றவர்

**நீர்க்கால்** —வாய்க்கால்

**நீர்நாற்று** — நீருள்ள நாற்றங்காலில் வளர்ந்த நாற்று

**நீர்த்தூம்பு** — மதகு

**நீர்விதை** — நீருள்ள நாற்றங்காலில் விதைக்கும் நெல்

**நீர்வாரம்**, **நீவாரம்** — குளநெல்

**நுகத்தடி** — நுகம்

**நுகத்தாணி** — நுகத்தடியை ஏர்க் காலில் இணைக்கும் ஆணி

**நெல் தூற்றுதல்** — நெல் மணியையும் பதரையும் பிரித்தல்

**நொய்** — இடிந்த அரிசி

**பசப்பு** — முளை கிளம்பிப் பசுமை நிறம் தோன்றும் வயல்பரப்பு

**படப்பு** — வைக்கோற்போர்

**படுகை** — ஆற்றங்கரையை அடுத்த வயல்

**பட்டம்** — விதையிடும் பருவம்

**பட்டி** — மாட்டுக்கொட்டில்; (தொழுவம்)

**பண்ணை** — வயல்

**பண்ணை கட்டுதல்** — நாற்றில் சிம்பு வெடித்துப் பெருகுதல்

**பண்ணைக்காரன்** — வேளாண்மைப் பணியாளன்

**பதக்கு** — இரண்டு குறுணி கொண்ட அளவு

**பதியம் போடுதல்** — செடிகளை வைத்துப் பயிராக்குதல்

**பத்தல்** — மரத்தாலான நீரிறை கருவி

**பயிரிடுதல்** — வேளாண்மை செய்தல்

**பயிர்க்குழி** — பந்தலிட்டுக் கொடிப் பயிர் வளர்க்க விதை நடுங்குழி

**பரம்படித்தல்** — நீர்விட்டு உழுத வயலைச் சமப்படுத்துதல்

**பரம்பு** — நிலம் சமப்படுத்தும் பலகை

**பரம்புச் சங்கிலி** — பரம்புப் பலகையையும் வல்லக்கையையும் இணைக்கும் சங்கிலி

**பரிதல்** — கதிர் வெளிப்படுதல்

**பல்லுக் கலப்பை** — புழுதி விதை விதைத்த நிலத்தில் உழுங் கலப்பை

**பல்லுப்பரம்பு** — தழைமிதி கருவி; கொளையமுக்கி(இரும்பாலானது)

**பழக்காய்** — களத்தில் அடித்த நெல்லில் பச்சை நிறமுடையது

**பழுதை** — வைக்கோற்புரி

**பள்ளையம்** — உண்கலம்

**பன்னரிவாள்** — கதிரறுக்கும் அரிவாள்

**பாடு** — உழைப்பு

**பாட்டம்** — கனமாகப் பெய்யும் மழை

**பாட்டாளி** — உழைப்பாளி

**பாண்டல்** — பாசி பிடித்து நாறும் நாற்றம்

**பாதாளக் கரண்டி** — கிணற்றில் விழுந்த பொருளை எடுக்கப் பல கொக்கிகளால் கோக்கப்பட்டுள்ள இரும்பு

**பாத்தி** — நீர் நிற்கும் பொருட்டு வரம்பு கட்டப்பட்ட நிலம்

**பிசிர்** — ஊற்று நீர்; நீர்த்துளி

**பிணை** —சூடடிக்கும் மாடுகளை இணைக்க இடும் முடிச்சு

**பிள்ளைக்கிணறு** — கிணற்றின் உட்புறத்துள்ள சிறுகிணறு

**பிளாச்சி** — பிளந்த மூங்கில்

**புஞ்சை** — புன்செய்; (காட்டு நிலம்)

**புடைத்தல்** — சுளகிலிட்டுத் தட்டுதல்

**புலம்** — வயல்

**புழுதி** — நீர்ப்பசையில்லாத மண்

**புழுங்கல் காத்தல்** — காய வைக்கும் புழுங்கலைக் காவல் காத்தல்; (ஊர்ப்பொதுவில் கூலி தரப் படும்.) பரம்பரைப்பணி

**புழுதி உழவு** — தரிசு நிலத்தை உழுதல்.

**புழுதி விதை** — நீரற்ற நிலத்தில் விதைத்தல்

**புறம்போக்கு** — குடிகளிடம் விடாததும் தீர்வையில்லாததுமாகிய நிலம்

புறவடை — கிணற்று நீரால் விளையும் நன்செய்

புனக்குளம் — மழைநீர்க் குட்டை

பூட்டாங்கயிறு—எருதைப் பிணைக்கும் நுகக்கயிறு

பூட்டை — வெண்டு; ஏற்ற மரம்

பூசாரம் — நிலச்சத்து

பூஞ்சணம் — பாசி படர்தல்

பொட்டல் — பாழ் இடம்

பொதி — மூடை

பொதிமாடு — சுமை எருது

பொரிக்கஞ்சி — பொரிமாவால் சமைத்த கஞ்சி

பொரிவு தண்ணி — நாற்றங்காலில் முளை எழுந்தபின் நீரை வடித்துப் பின் ஓரிருநாளில் பாய்ச்சும் நீர்

பொலி — தூற்றுத நெற்குவியல்

பொலிகல் — நெற் குவியலின் மீது வைக்கும் கல்

பொலிகாளை — பசுக்களைச் சினையாக்கும் பொருட்டு வளர்க்கும் எருது

பொலிபாடுதல் — சூடடிக்கும் போது உழவர் பாடுதல்

பொன்னேர் — பருவ காலத்தில் நல்ல நாளில் முதன்முறையாக உழும் ஏர்; (நாளேர்)

போட்டுக்கட்டுதல் — சிதைந்த வரப்பைச் சரிப்படுத்தல்

போர் — வைக்கோல்படப்பு

**போரடித்தல்** — சூடடித்தல்

**மடக்கி உழுதல்** — நேரே உழுதபின் திரும்பவும் மறு வரிசையில் உழுதுவரல்

**மடைத்தலை** — மதகு; ஆற்றுவரம்பு

**மட்டை** — அரைச்சாவி (நெல்)

**மண் அணைப்பு** — கிழங்கு பருக்க மண்ணைச் செடியின் அடியிற் சேர்த்தல்

**மண்கொட்டு** — மண்வெட்டி

**மரக்கால்** -- முகத்தல அளவைக் கருவி (கொள்ளளவு சில இடங்களில் 4படி சில இடங்களில் 8படி)

**மரந்தாங்கிக் கட்டை**—ஏற்ற மரத்தில் ஏற்றத்தினைத் தாங்கி நிற்கும் கட்டை

**மழைக்கால்** —கருநிறத்துடன் நீரிறங்கும் மேகம்

**மழையடை** — அடைமழை

**மாரி** — மழை

**மானவாரி** — புன்செய்

**மானியம்** — இறையிலி நிலம்

**மிடா** — பெரிய பானை

**முகடடைத்தல்** — உடைந்த வரப்பை அடைத்தல்

**முடி** — நாற்று முடிச்சு

**முடிநாறு** — நாற்றுமுடி

**முளை** — விதையிலிருந்து வெளிக்கிளம்பும் முதல் முளை

**முளைக்கட்டிப்போடுதல்** — விதைக்கு முன் விதையை ஊற வைத்து முளையிடச் செய்தல்

**முறைத்தண்ணீர்** — நீர் வற்றியுள்ள காலத்தில் இன்னின்னார்க்கு இன்னின்ன நேரத்தில் நீர் விட வேண்டுமென முறை வகுத்து விடப்படும் நீர்

**மூக்காங்கயிறு** — எருதின் மூக்குக் கயிறு

**மூடை** — பண்டப்பொதி

**மூட்டம்போடுதல்** — கீரை, கொத்து மல்லிப் பாத்திகளை ஈரம் காயாதபடி வைக்கோல் ஆகியவற்றால் மூடிவைத்தல்

**மூன்றுங்கம்பு** —முதல்நாள் நீரில் ஊற வைத்து மறுநாள் அதே நேரத்தில் அள்ளி வைத்து, மூன்றும் நாள் விதைப்பது

**மேல்உருட்டி** — கமலையின் மேல்பகுதியில் இருக்கும் வட்டு

**மேவாரம்** — விளைவிலிருந்து காணியாளனுக்குக் கொடுத்தற்குரிய தானியம்

**மேழிக்குச்சி**—கலப்பையின் கைப்பிடி

**மைச்சாரி** — கருங்குறுவை நெல்

**வடிகால்** — நீரை வடியவிடுங் கால்வாய்

**வண்டல்** — நீரொதுக்கிய மண்

**வதி** — சேறு

**வரப்புக்கட்டுதல்** — புதியவரப்பிடுதல்

**வரப்பு வெட்டுதல்** — அகலமான வரப்பைக் குறுக்குதல்

**வல்லக்கை** — பரம்பையும் நுகத்தை இணைக்கும் தடி

வறட்டி — தட்டிக்காய்ந்த மாட்டுச் சாணம்

வரமடை — வயலில் நீர் புகுந்து பாயு மிடம்

வாரம் — வாடகை; பங்கு

வானம் பார்த்த பூமி — மழையால் விளையும் நிலம்

விடுநிலம் — தரிசு

விதை — வித்து

விரை வாங்குதல் — காயடித்தல்

விவசாயம் — வேளாண்மை

விவசாயி — வேளாளன்

விளைச்சல் — விளைவு

விளைநிலம் — பயிரிடக்கூடிய நிலம்

வெங்கனி — சாவி; பதர்

வெங்கார் நாற்றம் — முதல் மழையால் காய்ந்த மண்ணில் எழும் ஆவி நாற்றம்

வெட்டுக்காடு — வெட்டித் திருத்திய காட்டுநிலம்

வெட்டுக்குருத்து — (மரத்தில்) வெட் டப் பட்ட இடத்தில் தோன்றும் குருத்து

வெள்ளம் — நீர்ப்பெருக்கு

வெள்ளாண்மை — உழவுத் தொழில்

வெள்ளாளன் — உழவன்

வேடு — பாத்திரத்தின் வாயை மூடிக் கட்டும் ஆடை

வைக்கோல் — நெற்பயிரின் உலர்ந்த தாள்

———

மூவேந்தர் அச்சகம், 37, சீ. பெ, ச. தெரு, சென்னை-14.

# எங்கள் நூல்கள்

## சாலையின் நூல்கள்

கவிதை :

| | |
|---|---|
| இளந்திரையன் கவிதைகள் | 3—25 |
| அன்னை நீ ஆடவேண்டும் | 3—00 |
| சிலம்பின் சிறுநகை | 1—50 |
| காலநதி தீரத்திலே | 2—00 |
| பூத்தது மானுடம் | 3—00 |
| கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே | 2—50 |

கட்டுரை :

| | |
|---|---|
| உலகம் ஒரு குடும்பம் | 3—00 |
| உலகத் தமிழ் | 1—00 |
| தமிழுக்காக | 3—00 |
| அய்ந்து பயணங்கள் | (அச்சில்) |

திறனாய்வு :

| | |
|---|---|
| புரட்சிக்கவிஞர் கவிதைவளம் | 5—00 |
| தமிழில் சிறுகதை | 2—50 |
| சிறுகதைச் செல்வம் | 3—75 |
| புதிய தமிழ்க்கவிதை | 3—00 |
| புதுத்தமிழ் முன்னோடிகள் | 3—00 |

## சாலை - சாலினி நூல்கள்

கட்டுரை :

| | |
|---|---|
| இரண்டு குரல்கள் | 3—00 |
| தமிழ்க் கனிகள் | 3—00 |
| தமிழனே தலைமகன் | 3—00 |
| தமிழ் தந்த பெண்கள் | 3—50 |

நூல்கள் கிடைக்குமிடங்கள் :

பாரி நிலையம், 59 பிராட்வே, சென்னை - 1

தமிழ்ப் புத்தகாலயம், 576, பைக்கிராப்ட்ஸ் சாலை, சென்னை - 5